பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

19 09 2026 SATURDAY - 7 15 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சுற்றுச் சூழல் மற்றும் பருவநிலை தொடர்பான சர்வதேச மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

2. வேளாண் தொடர்பான திட்டங்களையும், இலக்குகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்குமாறு, மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

3. முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக தமிழக அரசுடன் பேச்சு நடத்த தயாராக உள்ளதாக கேரள அரசு தெரிவித்துள்ளது.

4. ரஷ்யா மற்றும் ஈரான் மீது கூடுதலாக பொருளாதார தடை விதிக்கும் சட்டத்தில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

5. உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியின் Trap பிரிவில், இந்தியாவின் யோகன் சக்திவேல் முத்துக்குமார் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

>>>>>><<<<<

சுற்றுச் சூழல் மற்றும் பருவநிலை தொடர்பான சர்வதேச மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

தேசிய பசுமை தீர்ப்பாயம் ஏற்பாடு செய்துள்ள, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலையின் எதிர்காலம் என்ற தலைப்பிலான இந்த மாநாடு இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது.

இதில் சுற்றுச் சூழல் நிபுணர்கள், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற மற்றும் மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் பங்கேற்கின்றனர்.

மத்திய - மாநில அரசுகளின் பல்வேறு துறைகளின் உயரதிகாரிகள், மாநில சட்டசேவை ஆணைய உறுப்பினர்கள், சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையங்களின் பிரதிநிதிகள், மாநாட்டின் அமர்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுற்றுச் சூழலை பராமரிக்கவும், அதற்கான கொள்கைகளை உருவாக்கி செயல்படுத்துவதில் உள்ள இடைவெளியை போக்கும் வகையில் இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

வேளாண் தொடர்பான திட்டங்களையும், இலக்குகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்குமாறு, மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற தென்மாநிலங்களுக்கான மண்டல வேளாண் மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் பேசிய மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுஹான், மத்திய அரசும், மாநில அரசுகளும் குழுவாக செயல்பட்டு, வேளாண் திட்டங்களை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்தார்.

விவசாயிகளுக்கான அடையாள அட்டைகளை உருவாக்கும் பணியில் தென்மாநில அரசுகள் தீவிரமாக செயல்படவேண்டும் என்றும் தெலங்கானா, கர்நாடகா மாநிலங்கள் இதில் 75 சதவீத பணிகளை முடித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழ்நாடு, கேரளம் மாநிலங்களும், அந்தமான் நிகோபார் யூனியன் பிரதேசமும் இப்பணிகளை தீவிரப்படுத்த வேண்டும் என்றும், வரும் ஆண்டுகளில் விவசாயிகளுக்கான நலத்திட்டங்கள் இந்த அடையாள அட்டைகளை

சார்ந்திருக்கும் என்பதால், குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகளை முடிக்க வேண்டும் என்றும் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுஹான் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<

இந்தியா - கனடா இடையே விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்வது தொடர்பாக, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், கனடா வர்த்தகத் துறை அமைச்சர் திரு. மனிந்தர் சித்து-வுடன் புதுதில்லியில் நேற்று ஆலோசனை நடத்தினார்.

இதுதொடர்பான பேச்சுகளை விரைவுபடுத்தி, ஒப்பந்தத்தை இறுதிசெய்ய இருநாடுகளும் இந்த ஆலோசனையின்போது விருப்பம் தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த ஒப்பந்தம் அமலுக்கு வந்தால், வர்த்தகம், முதலீடு மற்றும் சேவை துறைகளில் இந்தியா – கனடா இடையே பொருளாதார ஒத்துழைப்பு அதிகரித்து, பல்வேறு துறைகளில் புதிய வேலைவாய்ப்புகளும் உருவாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக தமிழக அரசுடன் பேச்சு நடத்த கேரள அரசு தயாராக உள்ளதாக அம்மாநில நீர்வளத் துறை அமைச்சர் திரு. Mons Joseph தெரிவித்துள்ளார்.

கோட்டயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர். கடந்த மாதம் சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய முதலமைச்சர்கள் மாநாட்டின் போது, இதுதொடர்பாக கேரள முதலமைச்சர் திரு. வி.டி. சதீசனும், தமிழக முதலமைச்சர் திரு. விஜய்-ம் ஆலோசனையில் ஈடுபட்டதாக கூறினார்.

அடுத்தகட்ட பேச்சுவார்த்தை குறித்து தமிழக அரசிடமிருந்து முறையான அழைப்பு ஏதும் வரவில்லை என்றும், ஆனால் பேச்சுவார்த்தைக்கு கேரளம் எப்போதும் தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, புதிய அணை கட்டப்பட வேண்டும் என்றும் தமிழகத்திற்கு தேவையான தண்ணீரை கேரளா வழங்கும் திரு. Mons Joseph கூறினார்.

>>>>>><<<<<

புத்தொழில் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளில் இந்திய இளைஞர்கள் புதிய உச்சத்தை எட்டி வருவதாக குஜராத் முதலமைச்சர் திரு. புபேந்திர பட்டேல் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் நடைபெற்று வரும் சேவை உறுதிமொழி இயக்கத்தின் ஒரு பகுதியாக காந்திநகரில் நேற்று நடைபெற்ற இளைஞர்களுடனான கலந்துரையாடலில் பங்கேற்று பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

15 ஆண்டுகளுக்கு முன்பு நாட்டில் புத்தொழில் நிறுவனங்களுக்கென மத்திய மாநில அரசுகளின் ஆதரவு கிடைக்கவில்லை என்று அவர் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, புத்தொழில் இந்தியா திட்டத்தில் கவனம் செலுத்தியதன் மூலம். இளைய தொழில்முனைவோர்களுக்கு ஆதரவு அதிகரித்துள்ளதோடு, வேலைவாய்ப்புகளும் உருவாகி வருவதாக அவர் தெரிவித்தார்.

வேளாண் கழிவுப் பொருட்களை, ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல், நீர் மேலாண்மை ஆகிய துறைகளில் இளைஞர்கள் உருவாக்கியுள்ள புதிய மாதிரிகள், புதுமையான தீர்வுகளாக உள்ளன என்றும் திரு. புபேந்திர பட்டேல் கூறினார்.

>>>>>><<<<<

சண்டிகடில் கூட்டுறவு அடிப்படையிலான பாரத் டாக்ஸி சேவையை பஞ்சாப் மாநில ஆளுநர் திரு. குலாப்சந்த் கட்டாரியா நேற்று தொடங்கி வைத்தார்.

சொந்தமாக கார் வைத்திருக்கும் ஓட்டுநர்கள், முழுமையாக பயனடையும் வகையில் ஏற்கனவே பல்வேறு நகரங்களில் இந்த சேவை தொடங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஓட்டுநர்களும், பொதுமக்களும் பயனடைவார்கள் என்று நிகழ்ச்சியில் பேசிய திரு. குலாப்சந்த் கட்டாரியா தெரிவித்தார்.

>>>>>><<<<<

நாட்டில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களின் சதவீதம் தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில், தொழிலாளர்களின் சந்தை நிலவரம் குறித்த புதிய அறிக்கையில் இது தெரியவந்துள்ளது.

இதன்படி, மக்கள் தொகை அதிகமாக உள்ள 100 மாவட்டங்களில் குஜராத் மாநிலம், சூரத் மாவட்டத்தில் பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு அதிகமாக உள்ளது.

பீகார் மாநிலம், தர்பங்கா குறைந்த அளவு பெண் தொழிலாளர்களை கொண்ட மாவட்டமாக உள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறை திருத்த சட்ட மசோதா குறித்த நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

குழுவின் தலைவர் திரு. சஞ்சய் ஜெய்ஸ்வால் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் உள்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டு, மசோதாவில் இடம்பெற்றுள்ள முக்கியமான விதிமுறைகள் குறித்து, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளித்தனர்.

இந்தக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. சஞ்சய் ஜெய்ஸ்வால், கூட்டம் சுமுகமாக நடைபெற்றதாகவும், மசோதா தொடர்பாக உறுப்பினர்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பியதாகவும் தெரிவித்தார்.

>>>>>><<<<<

ஆந்திர மாநிலம், Dugarajapatnam-மில் கப்பல் கட்டும் தளத்தை அமைப்பது தொடர்பாக, பொதுத்துறை நிறுவனமான மஸகான் கப்பல் கட்டும் நிறுவனத்திற்கு

ஆந்திர மாநில அரசுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

அடுத்த 6 ஆண்டுகளில் இத்திட்டத்திற்காக 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தேவையான அரசு அனுமதி மற்றும் ஒப்புதலக்ள் கிடைப்பதன் அடிப்படையில், முதலீடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் ஆந்திர மாநில அரசு தெரிவித்துள்ளது.

இந்த கப்பல் கட்டும் தளம் செயல்பாட்டுக்கு வந்தால், நேரடியாகவும், மறைமுகமாகவும், 45 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

>>>>>><<<<<

ரஷ்யா மற்றும் ஈரான் மீது கூடுதலாக பொருளாதார தடை விதிக்கும் சட்டத்தில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

அந்த இருநாடுகளின் மீதும் பொருளாதார நிர்பந்தத்தை அதிகரிக்கும் வகையில், இந்த சட்டத்தில் அதிபர் கையெழுத்திட்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதன்மூலம் ரஷ்யாவிற்கு எதிரான சட்டபூர்வ தடைகள், வரிகள் மற்றும் கட்டுப்பாடுகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

ஈரான் மீதான தற்போதைய தடைகள் நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கா கூறியுள்ளது.

இந்தப் புதிய சட்டத்தின் படி, ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு-வை குறிப்பிட்ட அளவில் வாங்கும் நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது 100 சதவீதம் வரை வரி விதிக்கப்படும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

>>>>>><<<<<

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியின் Trap பிரிவில், இந்தியாவின் யோகன் சக்திவேல் முத்துக்குமார் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

இத்தாலியில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் பிரிவில் இந்தியாவின் Sabera Haris இறுதிப்போட்டிக்கு முன்னேறிய போதும், நுலிழையில் பதக்க வாய்ப்பை தவறவிட்டார்.

இதேபோல், பவ்யா திருப்பதி, Krishaka Joshi ஆகியோரும் இறுதிப்போட்டியில் பதக்க வாய்ப்பை தவறவிட்டனர்.

>>>>>><<<<<

ஆசிய விளையாட்டுப் போட்டிகள், ஜப்பானில் இன்று தொடங்குகிறது.

அடுத்த மாதம் 4ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்தப் போட்டிகள் ஜப்பானின் Aichi மாகாணத்தின் Nagoya-வில் நடைபெறவுள்ளது.

இதில் 43 பிரிவுகளில், 45 நாடுகளைச் சேர்ந்த 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இந்தியா சார்பில் 36 பிரிவுகளில், 496 பேர் கலந்து கொள்கின்றனர்.

இப்போட்டிகள் இன்று பிற்பகல் ஜப்பானின் Nagoya நகரில், பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளுடன் தொடங்குகின்றன.

தொடக்க விழா அணிவகுப்பின் போது, இந்தியா சார்பில் தேசியக் கொடியை மனுபாக்கர் மற்றும் Tajinderpal Singh Toor ஏந்திச் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், கிரிக்கெட் உள்ளிட்ட அதிக நேரம் நடைபெறும் விளையாட்டுகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன.

>>>>><<<<<